அனந்த சயனம்

ஜெமினி ரிலீஸ்

நடிகர்கள்

ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி	...	மோஹினி
,, எம். வி. ராஜம்மா	...	சுசீலா
,, ஆர். பி. லக்ஷ்மி தேவி	...	மோஹினியின் தாய்
,, வி. என். ஜானகி	...	ஸரஸா
,, கே. நாகலக்ஷ்மி	...	திவாகாரின் தாய்
,, டி. எஸ். ராஜம்மாள்	...	மஞ்சுளா
குமாரி சுப்புலக்ஷ்மி	...	பால கிருஷ்ணன்
ஸ்ரீ கே.சுப்ரமண்யம் பி.ஏ., பி.எல்	...	திவாகரர்
,, ஜி. பட்டு ஐயர்	...	நாட்டாண்மைக்காரர்
,, வித்வான் ஸ்ரீநிவாசன்	...	அரசன்
,, எம். ஆர். எஸ். மணி	...	ஸ்வேத சந்திரன்
,, பி. ஆர். ராஜகோபாலய்யர் / ,, ஸி. என். சதாசிவய்யா	...	குறவர்கள்
,, ஜாலி கிட்டு அய்யர்	...	அரண்மனை புரோஹிதர்
,, ஆர். எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்	...	மஹா விஷ்ணு
,, எஸ். ராதாகிருஷ்ணன்	...	சேர தேச அரசன்

மற்றும் கோமாளி சாம்பு, ராமச்சந்திரன், குளத்து மணி,
தஞ்சாவூர் மணி அய்யர் முதலியோர்

ஒளிப்பதிவு
கமால் கோஷ்

ஒலிப்பதிவு
பி. ரெங்க ராவ்

மேக் - அப்
ஹரிபாபு & மங்கய்யா

எடிட்டிங்
ஆர். ராஜகோபால்

ஸ்டுடியோ புரொடக்ஷன் மானேஜர்
கோபால் கிருஷ்ண மகரிஷ்

ஸீன் ஜோடனைகள்
கே. ஆர். சர்மா
டி. எஸ். கூட்வான்கர்

பிரோஸஸிங்
ஜெமினி லாபொரேடரி
திரன்தாஸ் குப்தா
ராமச்சந்திர தாஸ்
ஜகபந்து போஸ்

டான்ஸ் மாஸ்டர்கள்
கே. திருவேங்கட முதலியார்
கே. ராஜ்குமார்

ஒளிப்பதிவு உதவி : **ஸி. வி. ராமகிருஷ்ணன்**
ஒலிப்பதிவு உதவி : **கே. ஆர். ராமஸ்வாமி**

ரிகார்டிங்
பி. ஏ. எப். ஸௌண்ட் ஸிஸ்டம்

இப் படத்தின் முக்ய பாடல்களை சென்னை சரஸ்வதி ஸ்டோர்ஸ்
"கொலம்பியா" இசைத் தட்டுகளில் கேட்டு மகிழுங்கள்.

அனந்த சயனம்

கதைச் சுருக்கம்

ஸ்ரீ அனந்த சயனம் என்னும் திருவனந்தபுரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமி, பூலோகத்தில் அவதரிப்பதற்குக் காரணமா யிருந்தவர் ஸ்ரீ திவாகர யோகியார்.

கன்னட தேசத்தரச குமாரி சுசீலாவிற்குக் குருவா யிருந்த திவாகரர், ஸ்ரீ கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டு இகபர சுகத்தை வெறுத்திருக்கிறார். தன் தாயின் நிர்பந்தத்தின்பேரில் தன் சகோதரியின் புதல்வி ஸரஸாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறார். ஆனால் விவாக சமயத்தில் விரக்தி ஏற்பட்டு மணப் பந்தலிலிருந்து வெளியேறி விடுகிறார். இச்செய்கை அரசர் முதல் அனைவருக்கும் மன வருத்தத்தை உண்டாக்கி விடுகிறது. இனி அங்கிருந்தால் மறுபடியும் அரசர் முதலானவர்கள் தன்னை சம்சார பந்தத்தில் சிக்க வைக்க முயற்சி செய்யக்கூடு மென்றெண்ணி அதிலிருந்து தப்பி ஸ்ரீ கிருஷ்ணனை பஜனை செய்து கொண்டு க்ஷேத்திராடனம் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து திவாகரர் அரசனிடமும் சுசீலாவிடமும் விடை பெற அந்தப்புரத்திற்கு வருகிறார்.

வைகுண்டத்தில் ஸ்ரீ மகா விஷ்ணு லக்ஷ்மியுடன் ஏகாந்தமாய் இருக்கும் பொழுது, தான் பூலோகத்தில் அகஸ்திய முனிவருக்கு அனந்தங் காட்டில் தரிசனமளிப்பதாக வாக்களித்திருந்தது ஞாபகம் வருகிறது. அதைக் காரண மாகக் கொண்டு, தன்னை சதா பஜிக்கும் திவாகாருக்கும் தரிசனமளிக்க உத்தே சித்து தான் மோஹினி என்னும் குறப் பெண்ணாகவும், லக்ஷ்மி தேவி தனக்குத் தாயாக தனம் என்ற பெயருடனும் குறப் பெண்களாக உருமாறி திவாகரர் இருக்கும் கன்னட தேசக் குறப்பாளையத்திற்கு வந்து சேருகிறார்கள்.

சுசீலாவிடம் விடை பெற்றுச் செல்ல வந்த திவாகரரை, அந்தரங்கத்தில் காதலித்திருந்த சுசீலா, திவாகரர் க்ஷேத்திராடனம் செய்யத் தன்னை விடை கேட்டது தாளாது, தன் காதலை அவரிடம் வெளிப்படுத்தித் தன்னை மணந்து கொள்ளும்படி மன்றாடுகிறாள். திவாகரர் இதற்குச் சம்மதிக்கவில்லை. அப்போது மோஹினியாய் மாறு வேடம் பூண்ட ஸ்ரீ விஷ்ணு, இவர்கள் சம் பாஷணையின் கருத்தடங்கிய பாடலைப் பாடிக் கொண்டு வர, அந்த கானத்தில் லயித்த சுசீலா அவளை அந்தப்புரத்திற்கு வரவழைக்கிறாள். மோஹினி வந்து அங்கிருப்பவர் திவாகரர் என்பதை சுசீலா மூலம் அறிந்து கொண்டதுமே "ஐயோ, ஒரு பெண்ணை மணம் செய்து கொள்ளச் சம்மதித்து அவளைக் கை விட்ட பாபி இவர் என்று குறப் பாளையத்தில் கேள்விப்பட்டேனே. இவரை தரிசித்ததால் எனக்குப் பாபம் அல்லவோ சம்பவித்து விட்டது. அந்தப் பாபம்

தீரப் பிராயச்சித்தம் செய்து கொள்வது எங்கள் ஜாதி வழக்கமாச்சே?'' என்று சொல்ல, சுசீலா தன் காதலேயும் அவர் நிராகரித்ததாகவும், அதற்கும் சேர்த்துப் பிராயச்சித்தம் செய்யும் படிக்கும் கேட்டுக் கொள்ளுகிருள். மோஹினி பாபம் தீர ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்தோத்தரிக்கிருள். தன் பாடலால் பரவசமடைந்த திவாகரரிடம் சுசீலாவையாவது கைவிடாதிருக்கும்படி மோஹினி வேண்டுகிருள். திவாகரர் மோஹினியின் மோஹன ரூபத்தில் ஈடுபட்டிருப்பதை அவரது வார்த்தைகளாலறிந்த சுசீலா, அவரைத் தன் வசப்படுத்த எவ்வளவு முயன்றும் பயன் படவில்லை. கடைசியாக திவாகரர் அவ்விடத்தை விட்டு வெளியேறு கிருர். சுசீலா மோஹினியைத் தன்னிடம் இருக்கும்படி வேண்ட, மோஹினி தன் தாயின் உத்திரவு பெற்று வருவதாகச் சொல்லிச் செல்லுகிருள்.

மோஹினியைப் பார்த்தது முதல் அதே ரூபத்தில் லயித்த திவாகரர் வீட்டிற்கு வருகிருர். அங்கு ஸரஸாவின் ஸரஸத்திற்கு உடன்படாது அவளே உதறித் தள்ளி விட்டுத் தன் தாயிடம் க்ஷேத்திராடனத்திற்கு விடை கேட்க அதுவும் மறுக்கப்படவே, சஞ்சல மனத்துடன் ஓர் தனி இடத்தில் வந்து மெய் மறந்து உறங்கி விடுகிருர்.

குறப்பாளேயத்தில் நாட்டாண்மைக்காரக் குறவன் மோஹினியின் மேல் மோகங் கொண்டு அவள் தாயை தன் அந்தரங்கக் குறவர்கள் இருவரின் உதவியால் தன் குடிசையில் கட்டிப் போட்டு விட்டு, மோஹினியின் குடிசைக்குச் செல்கிருன். மோஹினியின் தாய் தன் தெய்வ சக்தியினல் நாட்டாமைக்காரன் வீட்டிலிருந்த புளி அடைக்கப் பட்டிருந்த பானே முழுவதும் பவுன் மோஹராவாக மாற்றி நாட்டாமைக்காரன் அக் குறவர்களே ஏமாற்றி பணம் சேர்த்து வைத்திருப்பதாகச் சொல்லி அவன் பேரில் அவர்களுக்கு விரோதம் உண்டாகும்படி செய்கிருள். அவர்கள் அதை நம்பி அவளேயும் கட்டிலிருந்து அவிழ்த்து விட்டு அந்தப் பணத்தையும் ஒரு இடத்தில் புதைத்து வைக்க புறப்பட்டார்கள். நாட்டாமைக்காரனே மோஹினியை சோராவாரி செய்ய முயல்கிருன்.

பாறையில் உறங்கிய திவாகரர் நல் உறக்கமின்றி கோர கனவு காண்கிருர். மோஹினி, ஸரஸா, ஸுசீலா மூவரும் தன்னே காதலிப்பது போலவும், கேலி செய்வது போலவும், தன்னேச் சுற்றி நடனம் செய்வது போலவும் அவருக்கு தோன்றுகிறது. அவர் உறங்கிய இடத்திற்கருகில் அந்த இரு குறவர்களும் குழி தோண்டி பணத்தை புதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வெட்டும் சப்தத்தைக் கேட்டு விழித்த திவாகரர் அவர்கள் பேசிக் கொள்வதிலிருந்து மோஹினி தன் குடிசையில் நாட்டாமைக்காரனல் துன்புற்றிருப்பதை அறி கிருர். அவளே மறக்க எண்ணிய வைராக்கியம் காற்ருய்ப் பறக்க மோஹினியை ஆபத்தினின்றும் விடுவிக்க காற்றினும் விரைந்து செல்கிருர்.

நாட்டாண்மைக்காரனின் எண்ணத்திற்கு உடன்படாது மோஹினி அவனிட மிருந்து தப்பித்துக் கொண்டு ஓடுகிருள். அவனும் பின் துரத்துகிருன். அங்கு வந்த திவாகரர் மோஹினியின் தாயால் விஷயமறிந்து பின் தொடரு கிருர்.

ராஜ குமாரி சுசீலாவைக் கல்யாணம் செய்துகொள்ள இச்சித்திருந்த சுவேத சந்திரன் திவாகரரை இடையூருகக் கருதினன். தெருக் குறத்தி அந்தப்

புரத்திற்கு வந்த விஷயம் தெரிந்ததும், அதைப் பயன்படுத்திக் கொண்டு திவாகரின் பேரில் மஹாராஜாவுக்குக் கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்கிறுனவன். திடீரென்று ராஜ குமாரிக்கு ஜுரம் கண்டிருப்பதாக மஹாராஜாவிடம் ஒரு தாதி வந்து தெரிவிக்கிறுள். மஹாராஜாவும் சுவேதசந்திரனும் ராஜகுமாரி இருக்குமிடம் வருகிறுர்கள்.

திவாகரின் நிராகரிப்பால் மனே வியாதி கொண்ட ராஜ குமாரி, பிரக்ஞை தவறி, திவாகரிடம் தான் பேசிக் கொண்டிருந்ததை உளறி விடுகிறுள். திவாகரரைப் பற்றி அரசரிடம் அதிகப் புகார் சொல்வதற்கு அதை யெல்லாம் சுவேத சந்திரன் உபயோகப் படுத்திக் கொள்ளுகிறுன்.

மோஹினியைத் துரத்திச் சென்ற நாட்டாண்மைக்காரனை திவாகரர் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, மோஹினியைத் தொடருவதற்குள் மோஹினி ஆற்றில் விழுந்து விடுகிறுள். திவாகரர் அவளை ஆற்றிலிருந்து கரைக்குக் கொண்டு வருகிறுர். மோஹினியைத் தேடி அவ்விடம் வந்த மோஹினியின் தாயார், திவாகரர் மோஹினியைத் தீண்டி ஆற்றிலிருந்து கரையேற்றியபடியால் தங்கள் ஜாதி வழக்கப்படி திவாகரர் மோஹினியின் கணவனுகி விட்டதாகவும், அதற்கடையாளமாக அவர் முண்டு கொடுக்க வேண்டுமென்றும் சொல்ல, தன்னையும் மறந்து தன் மேல் வஸ்திரத்தை மோஹினியிடம் அளிக்கிறுர் திவாகரர். மோஹினியின் தாயின் வற்புறுத்தலால், மோஹினியைத் திவாகரர் தன் வீட்டிற்கு அழைத்துப் போகிறுர்.

நாட்டாண்மைக்காரரின் பேரில் கோபங்கொண்ட இரு குறவர்கள் அவன் விழுந்து கிடந்த இடத்திற்கு வந்து அவனைக் கத்தியால் குத்தி விடுகிறுர்கள். அப்போது அங்கு சுவேதசந்திரன் வந்து விடவே தாங்கள் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு, யாரோ தங்கள் நாட்டாமைக்காரரை குத்திவிட்டு போய் விட்டதாக பாசாங்கு செய்து அழுகிறுர்கள். சாகும் தருவாயிலிருந்த நாட்டாமைக்காரன் மோஹினியை சும்மா விடமாட்டேன் அரமனை பாப்பான் அடிச்சுப் போட்டான் என்று சொல்லி உயிர் துறக்கிறுன். அரமனை பாப்பான் என்று சொன்னதிலிருந்து சுவேதசந்திரனுக்கு திவாகரர் பேரில் சந்தேகம் உதித்து தன் எண்ணங்கள் நிறைவேறக் கூடியதாய் ஊகித்து நகர கொத்தவாலிடம் அக் கொலையைப் பற்றி தீர விசாரிக்கும்படி தன் சிப்பாய்களுக்கு உத்தரவளிக்கிறுன்.

ஜுரவேகம் தெளிந்த ராஜகுமாரி, தான் பிரக்ஞை தவறி உளறியவைகளை சுவேதசந்திரன் கேட்டுக் கொண்டிருந்தானென்பதைத் தன் தாதி மஞ்சுளா மூல மறிந்துகொள்ளுகிறுள். சுவேதசந்திரனல் திவாகருக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் தன்னை நிராகரித்த திவாகருக்கு மோஹினியை மணம் செய்து கொடுத்து அவர்கள் இருவரையும் தன்னுடன் இருக்கும்படி செய்து தனக்கு மனச் சாந்தியை உண்டாக்கிக் கொள்வதற்கும், தன் உடைகளை மஞ்சுளாவுக்குக் கொடுத்துவிட்டு, அவளுடைய உடைகளைத் தான் அணிந்து கொண்டு சுசீலா குறப்பாளையத்திற்குப் புறப்படுகிறுள்.

மோஹினியின் குடிசைக்குச் சென்ற ராஜகுமாரி, தான் ராஜகுமாரியின் தாதியென்று மோஹினியின் தாயிடம் சொல்லி, மோஹினியைப்பற்றி விசாரிக்க, மோஹினி கல்யாணம் செய்து கொண்டு புருஷன் வீடு போய்

விட்டதாகக் கூறவே, மூர்ச்சையடைகிருள். அவளுக்குச் சிகிச்சை செய்யும் பொருட்டு பச்சிலை கொண்டு வர வெளிச் சென்ற மோஹினியின் தாய் திரும்பு வதற்குள் சுசீலா மயக்கம் தெளிந்து அங்கிருந்த மோஹினியின் உடைகளை அணிந்து வெளி வருகிருள். மோஹினியைத் தேடிக்கொண்டு அங்கு வந்த சுவேத சந்திரன் சுசீலாவை மோஹினியென நினைத்து பலவந்தப்படுத்த, அவனிடமிருந்து சுசீலா தப்பி ஓடுகிருள்.

மோஹினியை வீட்டிற்கு அழைத்து வந்ததால் கோபங் கொண்ட திவாகரரின் தாய், வீட்டை விட்டு வெளியேறுகிருள். ஸரஸாவிற்கும் மனத் தாங்கல் ஏற்படுகிறது. ஸரஸாவின் வஞ்சகத்தில் ஈடுபட்ட மோஹினி தான் அவ்விடத்திலிருந்து போய் விடுவதாகச் சொல்லி ஸரஸாவால் கொடுக்கப்பட்ட உடைகளை அணிந்து கொள்கிருள். சுவேதசந்திரனல் துரத்தப்பட்ட சுசீலா வழியில் திவாகரரின் தாயைச் சந்தித்துத் தன்னைக் காப்பாற்றும்படி வேண்ட, குறத்தி உடையுட னிருந்ததால் அடையாளம் தெரியாது திவாகரரின் தாயால் நையப் புடைக்கப்பட்டு சுசீலா மூர்ச்சையாகிருள். அவ்விடம் வந்த திவாகர ரால், அடிபட்டது ராஜகுமாரி யெனத் தெரிந்து இருவரும் அவளை வீட்டிற்கு எடுத்துச் செல்கிருர்கள். ஸரஸாவால் வஞ்சகமாகக் கொடுக்கப்பட்ட விஷம் கலந்த பாலைக் கொஞ்சம் அருந்திவிட்டு வெளிக் கிளம்பிய மோஹினி, திவாகரரால் தூக்கிக்கொண்டு வரப்பட்ட ராஜகுமாரியைத் தெரிந்து கொள் கிருள். விஷம் தலைக்கேறிவிட மோஹினி சிறிது சிறிதாக நினைவை இழக் கிருள். மோஹினிக்கு அங்கிருந்த பாலைக் கொடுக்கப்போக, அது தனக்கு வேண்டாமென்றும், சுசீலாவிற்கும் கொடுக்க வேண்டாமென்றும் ஜாடை காட்டி மோஹினி உயிர் துறக்கிருள். அப்போதுதான் திவாகரருக்குப் பாலில் நஞ்சு இருக்குமோ என்ற சந்தேகம் உதிக்கிறது. இது விஷ யத்தை ஸரஸாவிடம் கேட்கிருர். ஒன்றும் அறியாதவள் போல் அவள் பாசாங்கு செய்கிருள். திவாகரர் அந்தப் பாலை அவளையே குடிக்கும்படி பல வந்தப் படுத்துகிருர். அவரிடமிருந்து தப்பிச் செல்வதற்காக பின் நகர்ந்த ஸரஸா கால் தவறி மாடியிலிருந்து கீழே விழுந்து உயிர் விடுகிருள். கூட்டம் கூடிவிடுகிறது. திவாகரர் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்படுகிருர். நாட்டாண் மைக்காரன், மோஹினி, ஸரஸா முதலியவர்களைக் கொன்ற குற்றங்களை திவா கரர்மேல் சுமத்தி, அவருக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும்படி சுவேத சந்திரன் செய்கிருன். திவாகரர் வீட்டிலிருந்து அரண்மனைக்குக் கொண்டு போகப்பட்ட ராஜகுமாரி மூர்ச்சை தெளிந்து விஷயமறிந்து மஹாராஜாவிடம் திவாகரர் நிரபராதி என்பதைத் தெரிவிக்க இருவரும் கொலைக் களத்திற்கு ஓடி வருகிருர்கள். கொலைக்களத்தில் தண்டனை நிறைவேற்றும் சமயம்.

திவாகரர் மஹாராஜாவால் விடுவிக்கப்படுகிருர். மஹாராஜாவும், சுசீலா வும் திவாகரரை மறுபடியும் அரண்மனையில் வந்திருக்கும்படி வேண்டு கிருர்கள். திவாகரர் அதை மறுத்துவிட்டு துறவியாகக் கிளம்பி பிருந்தா வனத்தை அடைந்து தவம் புரிகிருர். பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் குழந்தை வடிவாகி, திவாகரரின் மடியில் உட்கார, திவாகரர் கோபங்கொண்டு குழந்தையை பகவான் என்றறியாது புறங்கையால் தள்ளி விடுகிருர். பகவானும் மறைந்து விடுகிருர். தியானத்தி லிருந்த திவாகரர் கண் விழித்துப் பார்க்க எதிரில் ஒன்று மில்லாதது கண்டு வருந்துகிருர். அசரீரியால் குழந்தை வடிவாக வந்தது பகவான் என்று

அறிந்து அவரைப் புறக்கணித்த கை தேகத்தில் இருக்கக் கூடாதென்று தன் கையை நெருப்பி விடுகிறார். கை தீப்பற்றி எரிகிறது. பகவான் பாலகிருஷ்ண வடிவில் திவாகரர் கண்ணுக்குப் புலப்படாமல் வந்து தன்னை அனந்தங் காட்டில் வந்து தரிசனம் செய்யும்படி ஆக்ஞாபித்து மறைகிறார். திவாகரர் காடு மலைகளெல்லாம் கடந்து அனந்தங் காட்டிற்கு வருகிறார். அகஸ்திய முனிவர் அனந்தங் காட்டில் ஸ்ரீ பகவான் திவாகரருக்குத் தரிசனமளிக்கப் போவதை ஞான திருஷ்டியினு லறிந்து, சிஷ்யர்களுடன் அனந்தங் காட்டிற்குப் புறப்படு கிறார். திவாகரர் அனந்தங் காட்டில் ஸ்ரீ மகா விஷ்ணுவை ஸ்ரீ தேவி, பூதேவி சகிதம் தரிசிப்பதையும், பிறகு சிலா ரூபமாக ஆதிசேஷன் பேரில் பள்ளி கொண்டு பகவான் திவாகரருக்குக் காக்ஷி யளிப்பதையும், மோஹினியின் தாயான ஸ்ரீ மஹா லக்ஷ்மியால் அளிக்கப்பட்ட அக்ஷய பாத்திரத்தால் ஏராளமான ஜனங்களுக்கு சுசீலா அன்னம் அளிப்பதையும் சுசீலா சேர நாட்டரசருடன் அனந்தங் காட்டிற்கு வந்து திவாகர யோகியாரை சந்திப்பதையும், திருவனந்த பத்மநாபன் ஆலயம் ஏற்படும் விசேஷத்தையும், திவாகர யோகியார் ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமியின் திரு ஜோதியில் கலப்பதையும் வெள்ளித் திரையில் காணலாம்.

சுபம்.

அனந்த சயனம்

பாட்டுகள்

1. சுசீலா

ராகம் : காபி] [தாளம் : திச்ர ஏகம்

ப. வாட்டமுறு மென்பாட்டை எவரும்
கேட்டுத் தேருதல் சொல்லார்
கூட்டமுடன் கொண்டாட்டத்தில் மனம்
நாட்டம் சிறிதும் இல்லை (வாட்ட)

அ. கஷ்டமிது எனக் கிஷ்டமில்லாததைச்
செய்வது என்ன நிர்ப்பந்தம்
கசப்பு மருந்தை புசிக்கவோ அலங்
கார மெதற்கென் சந்தம். (வாட்ட)

2. திவாகரர்

ராகம்: கானடா] [தாளம்: மிச்ர சாபு

ப. நானுன்றன் த்யானம் மறவேனே — க்ருஷ்ண — க்ருஷ்ண
ஈனமானிட ஜன்மம் எனெடுத்தேனே க்ருஷ்ண (நா)

அ. பொய்யை மெய்யென்று — போற்றுமிவ் வுலகமே
நைய்யும் என் நெஞ்சமும் — நஞ்சென இதைக் கண்டு (நா)

ச. உன்னைத் துதி செய்வதே — உடலெடுத்ததின் பயன்
அன்னிய சிந்தனை — அறவே நான் மறந்தேன் க்ருஷ்ண (நா)

3. சுசீலா

ராகம் : பிலஹரி] [தாளம் : ஆதி

ப. தேவகி தவமைந்தா — முகுந்தா
தேவகி தவமைந்தா — கோவிந்தா (தேவகி)

அ. பூவுலகில் துணையாரெனை வந்தாளாய்
பொற்பதமே கதி நீ விரைவாயருள் தீனதயாளா (தேவகி)

ராகம் : தன்யாசி] [தாளம் : ஆதி

ப. மறவேன் கண்ணனையே — நான்
மறவேன் கண்ணனையே — கனவிலும்
மறவேன் கண்ணனையே.

அ. காதல்கொள் கன்னியரைக் கைவிடா மெய்யனை
காமகோடி ஸுந்தர ஸரஸ கோபாலனை (மற)

ராகம் : ஹிந்தோளம்] [தாளம் : ஆதி

முரளீ கானம்
முரளீ கானஜநன் மோஹன
முரளீ கானஜகன் மோஹன
முரளீ கானம் முரளீ கானம் முரளீ கானம்.

4. கோரஸ்

ராகம் : காபி] [தாளம் : ஆதி

வன்னக்கிளி வானக்குயிலே — நீ
என்னுடனாடவா என்னருமை மடமயில் — (வ)
வாவா வளரு நிறைமதி
போலவே ஒளி வீசும் மாமுக (வ)

ராகம் : உசேனி] [தாளம் : ஆதி

தண்ணீர் இரைக்க வேணும் தனனன எலேலோ
தரிசெலாம் உழுதிடணும் தனனனன எலேலோ
தங்கமே செம்பாப்பயிர் சாயுங்கதிராய் — தனன
சாயுங்கதிராய் — கொய்துநாம் கூட்டி குமிக்க.

ராகம் : செஞ்சுருட்டி] [தாளம் : திச்ர ஏகம்

கட்டுக்கட்டி களமடிப்போம் எலேலோ —
காற்றுள்ளபோதிலே தூற்றுவோம் எலேலோ
விறகொடித்து வருகுவோம் விரைவில் வீடுசேருவோம்
துள்ளி எழுந்தே குதிப்போம் — துணிதுவைத்தே குளிப்போம்
சோராக்கியே புசிப்போம் — சொகுஸா குந்தி சீலைதைப்போம்
தனனனன தானன — தனனனன தானன.

5. சுசீலா & திவாகரர்

ராகம் : காபி] [தாளம் : ஆதி

ப. ராதை களங்க மில்லா காதல் கொண்டாள்
கோதை கருமுகில் வண்ணனிடம் — (ரா)

ராகம் : நவரோஸ்] [தாளம் : ஆதி

ப. மாதவன் ராதையோடு ஒன்று கலந்தான்
ப்ரேமை வளர்மனக் கோவிலில் வைத்தான் — (மா)
அ. ஈருடல் ஓருயிர் என்போம் — ஆனல்
யார் உடல் யார் உயிர் என்று நாம் அறியோம் — (மா)

6. மோஹினி

ராகம் : ஸிந்து பைரவி] [தாளம் : திச்ர ஏகம்

ப. ஆடவர்களின் பசப்பு வார்த்தை — ஜலத்தில் எழுதும் எழுத்தே
காதல் காதல் என்பர் தங்கள் — காரியம் கை கூடும் வரையில்

(சதுஸ்ரம்)

என்று சொன்னுள் - தோழியிடம் ராதை சொன்னுள் - சொன்னுள்.

அ. ஆசை அறுபதுநாள் — அவர் மோகம் முப்பதுநாள் — என்று
பேசுவதெல்லாம் மனிதனின் வறண்ட - மனதைக் கருதிதானே அறிவாய்
என்று சொன்னுள் - தோழியிடம் ராதை சொன்னுள் - சொன்னுள்.

(தோகையறு)

பெண்டு பிள்ளையை ஆதரிப்பதே இன்பம்
வேற்றுமை கொண்டால் அதுவே துன்பம்.

ச. அன்பென்பது முயல் கொம்பே (நிஜ) —
தேன் குடித்தபின் மலர் விடுத்த சுரும்பே
என்று சொன்னுள் - தோழியிடம் ராதை சொன்னுள் - சொன்னுள்.

7. மோஹினி

ராகம் : சுத்த சாவேரி] [தாளம் : ஆதி

ப. க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண

ராகம் : தயாவதி] [தாளம் : கண்ட திரிபுடை

அ. ஸ்ரீயது திலக யமுன தடந்தவழும்
பூஞ்சரண ச்ருங்கார சுகுண கெம்பீர
சுடாலங்கார கனக மகுட லவித
ப. ஸ்ரீ கோவிந்த மதுரா நகரதிப (ஸ்ரீ)

ராகம் : அமீர் கல்யாணி] [தாளம் : கண்ட திரிபுடை

ராதாரமண ஜகன்னுதா அருள் புரியவா
ஹரே முனிவர் அமரரும் வணங்கும் உயர்
விமல கமல நயன ப்ருந்தாவன சர—
முகுந்தா முராஹரா அனந்தா ஸரஸதர
கோவர்த்தன கிரிதனே குடை பிடித்தவனே
கன்னியர் மன வெண்ணேயை திருடும் அச்சுதனே
காளியன் மணிமுடிதனில் மகிழுடனுடும்

8. சுசீலா

ராகம் : கமாஸ்] [தாளம் : ஆதி

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ப. ஆனந்தம் ஆனந்தமே—ஆஹா ஈதென்ன (ஆ)
அ. காண்பதென்ன உண்மையோ
கனவிளங்கும் இன்பமோ ப்ரம்— (மான

ச. 1. விந்தை இவள் பேர் மோஹினி
தேவாம்ருதமோ மாமதுர மேனி தழுவவே (ஆன)

2. சந்தமிகும் சந்தணமோ தென்றலிதோ இன்றெனது
மனம் குதூஹலமுடன் பரவச முறுவதும்
பெரும் அதிசயமே அங்கங் குளிரும் பா (மான)

9. நாட்டாண்மை வேலைக்காரர்கள்

ப. மொந்தை முழுக்கள்ளு வயிர் கொள்ளுமே — எந்தனுக்கே
அண்ணாந்து வாய் திறக்க — அண்ணாத்தே போட்டுகிட்டா
எண்ணாத ரோசனையும் கண்ணான காட்சிகளும்
கண்ணிலே காணுமே என்னாளுமே

அ. ஆஹா பல் ஜோக் — ஆஹா பல் ஜோக்
ஆஹா பல் ஜோக் அடா மடாக்கள்ளு குடிப்பேன்
குடிச்சாலும் அசையவே மாட்டேன்
அட விடடா — அட விடடா — ஆரடா நில் பார்க்கிறேன்
பந்தயம் போடுகிறாயா — பார்க்கிறேன் பந்தயம் போடுகிறாயா
அட பொறுடா — நீ பொறுடா — இங்கே சரிடா
ஆஹா பந்தயம் போடென்னேடே — உன்
மொந்தையைக் கொண்டு நீ ஓடு — அடடடா
அதிசய மோடா இங்கு போடு — பார்க்கிறேன் (ஆஹா)

10. நாட்டாண்மைக்காரர் — மோஹினி

நா : மைனாவே பசுங்கிளி நீ வாவா
பைங்கிளியே பஞ்சவர்ண கிளி வா

மோ : ஈனமே — இதுவே — மானமே இலையோ
போக்கிரி நீ அறிவு கெட்டவனே — ஆகாதுனக்கே

நா : ஏனோ இங்கென வீணே வெறுக்கிறாய்
மானே என் மவராசி எனைப்பார்

11. நாட்டாண்மைக்காரர்

ப. நீ வாடி எனதாசை கண்மணியே (ஓஹோ)
கனியே காதற் கிளியே (நீ)

அ. அடடா மம்மத ராஜா எனைப்போல்
யார் உனக்கே கிடைப்பாரோ
பட பட பட பட வென்றுமே பேசும்
பெரு வாயாடி நீ அறிந்தேன்
கிடந்தா கிடக்கு பிடிவாதம் ஏன்
நீ ஓடாதே குட்டி வாவா (நீ)

12. திவாகரர்

ராகம் : ஹிந்து ஸ்தானி] [ஆதி : தாளம்

ப. சஞ்சலம் தீர்ந்தென் மனம் தெளியாதோ
அஞ்சலென் றென்னை நீ ஆண்டரு ளாயோ (சஞ்)
அ. அஞ்சன நீள்விழி மங்கையர் வீசும்
வஞ்ச வலை விழாமல் நானும் உய்வேனே

ராகம் : சாமா] [ஆதி : தாளம்

ச. பங்கஜ லோசனா — பாப விமோசனா
சங்கட ஹரண — கம்ஸாரி முராரி
ப. எனிந்த ஸஞ்சலமே — என்றனக் (கேன்)

13. திவாகரர் — மோஹினி — சுசீலா

ராகம் : வஸந்தா] [தாளம் : ஆதி

திவா :— ஜீவலோகம் வானம் யாவும் நான் மறந்தேன்
ஜகன் மோஹினி உனைக் கண்டு (ஜீவ)

மோ :— (தொகையறு)
கண்ட போது கற்கண்டுபோல் பேசும் வித்தையே சுபாவம் -
(உங்களை)
ரெண்டு மங்கையர் நினைந்து நினைந்து உடல் சோர்ந்தனரே பாவம்.

ராகம் : கல்யாணி] தாளம் : ஆதி]

திவா :— உடல் பொருளும் நீ பாவையே — உறுதியிதே எனை
நம்புவாயே — என் (உடல்)

மோ :— அடாது பாவையர் நம்புவோர் — அவர் ப்ரேமையை வஞ்சனை
செய்வது.

திவா :— பேசுவதிலும் மனமோஹினி பெயரிலும் அழகிலும் ஒருவர்
நிகரில்லை
முனம் அமிர்த மதனம் செய்த பொழுதவரித்த புவன
மோஹினியும் நீயோ ஸ்துதி

மோ :— நீர் கபட முடனே புகழ்வதுவோ — அலது நிஜம்
தானோ எனை
நெஞ்சமதில் வஞ்சம ற ப்ரேமையுடனே விரும்புவது
முழுமனதுடனே
நானொரு பெரிய மோஹினி தானோ — மாய அசுர மோஹினி
அவள் மஹா அழகோ

ராகம் : அமிர்தவர்ஷினி] தாளம் : ரூபகம்]

ப. விரைந்து வந்தருள் செய்யா — விடிலிவ் வேளை என்
செய்வேன் (வி)

அ. கரை கடந்த அன்பினுலே—கடும் சொல்லாலே புலம்பும் எனை
கருணை மனமுடன் பாரும் கதியிலை கனிந்துவாரும்
கனவிலும் மறவேன் பிழை பொறுத் திரங்குமே
கலங்குமெனை (வி)

ச :— ஸரஸிஜாக்ஷி ஜகன் மோஹன — ஸரஸ ஸத்வ குண பூஷண
சரணம் உந்தன் சரணும்புஜம்—ஜயஜய ஸ்ரீ புருஷோத்தம (வி)

14. கோரஸ்

ராகம் : ஆனந்த பைரவி] **தாளம் : சாப்பு]**

ப. கண் கண்ட தெய்வம் நீயே-கருணை செய் கோமாதாவே (என்)
விண் கண்ட காமதேனு - கருணை செய் கோமாதாவே (கண்)

பஜன்

ராகம் : செஞ்சுருட்டி] **[தாளம் : ஏகன்**

ப. ஜய ஜய க்ருஷ்ண — ஜய ஜய க்ருஷ்ண
ஜய ஜய க்ருஷ்ண — கோபிநாதா

ச. 1. தருணம் வந்தாளாய் — தாமரைத் தாளா
பரம தயாளா — ஸ்ரீ கோபாலா

2. நந்த சுகுமாரா — நவநீத சோரா
மணிமய ஹாரா — லோகாதாரா (ஜய)

கும்மி

ராகம் : உசேனி] **[தாளம் : திச்ர ஏகம்**

ப. சின்னி க்ருஷ்ணனைப் பாடுவோமே — இளஞ்
சிங்கார மூர்த்தியைப் பாடுவோமே
மின்னும் கைவளை குலுங்கவே — கும்மி
பாடுவோமே கும்மி பாடுவோமே

கோலாட்டம்

1. ப்ருந்தாவனம் தனிலே — கோபாலன் — புல்லாங் குழலூத
பட்ட மரங்களும் கோபியர் உள்ளமும் பூத்து தளிர்க்குமடி

2. கல்லும் கரைந்தோட - என் நெஞ்சக் கல்லும் கனியுமடி
புல்லும் தின்னு திளங் கன்றுகள் மாடுகள் பரவசம்
கொள்ளுமடி

15 நாட்டியம்

ராகம் : உஸேனி] [தாளம் : ரூபகம்.

ப :— கோபாலா - கோவிந்தா கண்ணா என்றுன்னை
நினைந்தேங்கி உளமுருகுகின்றாள்
தன்னந் தனிமையில் ஐய (கோபா)

ச :— (1) உணவையும் வெறுத்தாள் — தேவா இரவு பகலும் (கோ)

(2) ஹரிமுகுந்த திசை திசை நிறைந்த உனைக்
கலந்து மகிழ்ந்தவள்போல் (கோ)

(3) மந்தஹாஸ வதனனே — நந்தகோப சுதனே
சந்த்ர நிலவாம் கொடிய வெய்யில் வீச உடல் கருகி (கோ)

(4) ஸ்ரீ ராதா லோல த்ரி ஜகன்மோஹன
மாமோஹலாகிரியதனால் நொந்தே
வாஸுதேவனே மிகவும் வருந்தும் மடந்தைக்கு நின்
அருளலாது உலகில் வேறு மருந்தேது விரைந்தருள்வாய் (கோ)

16. திவாகரர்

ராகம் : கரஹரப்ரியா.] [தாளம் : ஆதி.

ப : பாராமுகம் ஏனய்யா — அடிமையிடம் (பாராமுகம்)

அ : ஸுரா ஸுரர் பணிய — அராவணை துயிலும்
முராரியே அருள் தாாமல் இன்னம்

ராகம்: ஜோன்புரி.] [தாளம் : ஏகம்.

எப்போ வருவாரோ — எப்போ வருவாரோ

பஜன் :— எப்போ வருவாரோ — கண்ணன்
எப்போ வருவாரோ — மணிவண்ணன்
எப்போவருவா ரோ

17. பால கிருஷ்ணன்

ராகம் : பியாஹ்] [தாளம் : ஆதி.

ப : வருவீர் அனந்தங் காட்டினில் என்றன்
தரிசனம் பெறுவீரே—திவாகரே.

அ : விரைவில் வருவீர் ஆனந்தம் பெறலாம்
விரிநீருலகினில் வினையற எனதிடம் (வரு)

18. திவாகரர் — சுசீலா

ராகம் : அடாணு.]

[தாளம் : ஆதி.

திவா :—

அனந்த சயனம் — ஆனந்த சயனம் — ஆனந்தபத்மநாபசயனம்

ப : ஸுர முனிவரும் நெடும் நாளாய் காணரும் திவ்ய
தெரிசனம் கண்டேன் — கண்டேன் — கண்டேன்
தெரிசனம் கண்டேன் ஜன்ம சாபல்யம் ஆனேன்.

திவா :—

[தாளம் : ரூபகம்.

பத்மநாபா, பதுமநாபா, பத்மநாபா

சுசீலா :—

அ : உந்தன் கருணை இன்றி அடிமை உய்வதெங்கே மாதவா
ஊர்கள் தோறும் ஓடித்தேடி ஓய்ந்தேன் கேசவா
எந்தன் ப்ராண காந்தனவர் எங்கு சென்றார் என்றறிகிலேன்
என்று காண்பேன் அவர் திருமுகம் என்று எனது மனது கலங்க
ப : நீயருள் ஸ்ரீ கோபாலா

19. கோரஸ்

ராகம் : பிலஹரி.]

[தாளம் : திச்ரதிரிபுடை.

பதுமநாபா — பரமபுருஷா — பரஞ்ஜோதி ஸ்வரூபா
உததி நிவாஸ உரகசயன — உன்ன தோன்னத மஹிமா
யதுகுலோத்தம யக்ஞரக்ஷக — யக்ஞ சிக்ஷக ராம நாம
விபீஷணபாலகா நமோ நமோ—விபௌவரதாயகா
நமோ நமோ (ப)

சுபம்.

ஆனந்த விகடன் பிரஸ், மதராஸ். 50 M—J 401. Feb. '42.

அனந்த சயனம்

மாட்சிமை தங்கிய திருவாங்கூர் மஹாராஜா அவர்களின் பேராதரவின்கீழ்
மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் தயாரித்த தமிழ் படம்

கதை: ஸ்ரீ எஸ். ஏ. துரை அவர்களின் மொழி பெயர்ப்பி லிருந்தும், திருவாங்கூர் சமஸ்தான கையேட்டுப் பிரதிகளி லிருந்தும், திருவாங்கூர் புராண இதிகாசங்களி லிருந்தும் — தழுவி அமைக்கப் பெற்றுள்ளது. —

ஸினிமா கதை, ஸீனரியோ, வசனம் :

கே. சுப்ரமண்யம், பி. ஏ., பி. எல்.

டைரக்ஷன் :

கே. சுப்ரமண்யம், பி. ஏ., பி. எல்.
ஸி. எஸ். வி. அய்யர்

புரொடக்ஷன் எக்ஸிக்யூட்டிவ்ஸ் :

ஜி. பட்டு ஐயர்	...	அஸோஸியேட் டைரக்டர்
எஸ். ஏ. ஐயர்	...	புரொடக்ஷன் மானேஜர்
கே. ஜே. மகாதேவன்	...	டைரக்டர்ஸ் அஸிஸ்டெண்ட்
எம். ஆர். எஸ். மணி	...	,,
ஆர். ஜகதீசன்	...	,,
வத்ருப். எஸ். ஸ்ரீநிவாசன்	...	,,

சங்கீத டைரக்ஷன் :

வி. எஸ். பார்த்தசாரதி ஐயங்கார்

ஸாகித்ய கவனம் :

பாபநாசம் சிவன்
பி. ஆர். ராஜகோபாலய்யர்

ஆர்ச்செஸ்ட்ரா :

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்
கர்னடிக் ஆர்ச்செஸ்ட்ரா

சென்னை — மூவிலாண்ட்

ஜெமினி ஸ்டுடியோவில்

தயாரித்தது

ஜெமினி ரிலீஸ்